**திவிநெகும நிதியம் - 2016**

திவிநெகும நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 இன் 01 ஆம் இலக்க திவிநெகும அதிகாரச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக **(ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810)** இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை திவிநெகும நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

நியம இலக்கம் 03 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் கொடுக்கல் வாங்கல்கள், வேறு நிகழ்வுகள் மற்றும் சந்தர்ப்பங்கள் என்பன அவை இடம்பெற்ற குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். எனினும், சமுர்த்தி சமூக வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்கள் பேணப்பட்டு வரும் 1286 கட்டிடங்களுக்கான பெறவேண்டிய வாடகை வருமானம் ரூபா 15,432,000 நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதற்குப் பதிலாக தேறிய உள்ளபடியான வருமானம் ரூபா 12,226,000 மட்டுமே நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கடந்த வருடங்களில் வருமானம் உழைக்கக் கூடிய செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 617,617 ஆன தொகை பெற வேண்டிய பண மிகுதிக்கு சீராக்கப்படாது வருடத்தின் வருமானமாகக் கணக்கிடப்பட்டிருந்தது.

#### 2.2.3 கணக்காய்விற்கான சாட்சிகள் இல்லாமை

மீன்பிடி மற்றும் விலங்கு வேளாண்மை பெறவேண்டிய மிகுதி மற்றும் விவசாய பெறவேண்டிய மிகுதி போன்ற இரு கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 17,412,473 இற்கான விபரப்பட்டியல் மற்றும் நிலுவை உறுதிப்படுத்தல்கள் சம்பந்தமாக எழுத்து மூலமான சாட்சிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்கு

2014 ஆம் வருடத்தில் தேசத்தின் மகுடம் நிகழ்ச்சித்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட 3 மாவட்டங்களுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக திறைசேரியினால் மீள் நிரப்புதல் அடிப்படையில் வழங்கப்பட்ட ரூபா 212,000,000 ஆன கடன் தொகையைக் கணக்காய்வுத் திகதி வரையில் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க் சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் வெளியிடப்பட்ட நிதிப்பிரமாணம் 876(3) இன் பிரகாரம் நிதியத்தைச் சட்டரீதியாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமையுடன் திவிநெகும (சமுர்த்தி) அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் இந்த நிதியம் தொடர்ந்தும் பேணப்படுவதற்கான தேவைப்பாடு சம்பந்தமாக மீளாய்வு செய்யப்படவில்லை.

3. நிதிசார் மீளாய்வு
------------------------------

3.1 நிதிசார் விளைவுகள்
----------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவு ரூபா 114,506,350 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 87,064,477 ஆனதுடன் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் நிதி விளைவுகளில் ரூபா 27,441,873 ஆன முன்னேற்றமொன்று காணப்பட்டது. முதலீடுகளுக்கான வட்டி வருமானம் உள்ளடங்கலாக மொத்த வருமானம் ரூபா 58,341,814 ஆல் உயர்வடைந்தமை இம்முன்னேற்றத்திறகுப் பிரதான தாக்கமளித்திருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு
--------------------------------------

4.1 செயலாற்றல்
---------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமுர்த்தி சமூக வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களை ஸ்தாபிப்பதற்குத் தேவையான நிதி வசதிகளை வழங்குதல் இந் நிதியத்தின் நோக்கமொன்று என்பதுடன் நாடாளாவிய ரீதியில் அமைந்துள்ள 1286 சமூக வங்கிகள் / வங்கிச் சங்கங்களில் மீளாய்வாண்டில் 13 வங்கிச் சங்கங்களை நிர்மாணிப்பதற்கும் மற்றும் 9 வங்கிச் சங்கங்களை திருத்தியமைப்பதற்குமாக ரூபா 25,747,492 செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அப் பணிகளுக்காக வருடாந்த வருமானத்தில் செலவிடப்பட்ட சதவீதம் நூற்றுக்கு 17.19 வீதமான குறைந்தளவாகக் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான செயற்திட்ட வருமானம் மற்றும் வாடகை வருமானம் முறையாகக் கணக்கிடப்பட்டு அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாததுடன் நாடாளவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்களில் கிடைக்கும் வருமானம், முதலீடு /மீள் முதலீடுகள் செய்யப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்
-----------------------------------------------------

நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் பெற வேண்டிய தொகையில் உள்ளடக்கப்பட்டுள்ள மொத்தம் ரூபா 17,412,423 ஆன விவசாய, மீன்பிடி மற்றும் வேளான்மைக் கட்டுப்பாட்டுச் செயற்திட்டத்திற்காக சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 2007 வரையில் திறைசேரி ஒதுக்கங்களின் அடிப்படையில் சமுர்த்தி அதிகார சபையினால் மீண்டும் அறவிடப்படும் அடிப்படையில் பயனாளிகளுக்கு சுழற்சி முறையில் கடன் வழங்கப்பட்டிருந்தது. இக் கடன் அறவீடுகள் 2007 யூலை 16 ஆந் திகதிய ச/அடி/10/ஜாச.கம்/ சுழலும் நிதியம் ஆம் இலக்க சமுர்த்தி பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் பிரதேசச் செயலக அலுவலகங்களில் ‘‘கம் புபுது வாழ்வாதாரச் சுழற்சி’’ கணக்கிற்கு செலவு வைப்பதற்கு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு வரையில் அறிக்கை சமர்ப்பித்தல் அல்லது பணம் தீர்க்கப்படுதல் மேற்கொள்ளப்படவில்லை. இக் காரணத்தினால் 2007 ஆம் வருடத்திற்குப் பின்னர் எவ்வித வருமானம் உழைக்கும் செயற்திட்டங்களிலிருந்தும் நிதியத்திற்கு பணம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2)(ஈ) பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதத்திற்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் , 05 வருட கால தாமதத்தின் பின்னர் 2021 யூலை 14 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தி மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(1) பிரகாரம் நிதியத்தின் அலுவல்கள் சம்பந்தமாக வரவு செலவுத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

நிதியம் சட்டரீதியாக்கப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்படுவதுடன் புத்தகங்கள் மற்றும் பதிவுகளை முறையான வகையில் பேணுவதுடன் முறையாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கான விசேட அவதானம் வேண்டப்படுகின்றது.